# பிரசைகள் பட்டயம்

## பிரசைகள் பட்டயம்

நிறுவனத்தின் பெயர் - உயர்நீதிமன்றப் பதிவகம்

‘‘தற்போது உங்களுக்கு சேவை வழங்குவதற்கு தயாராக உள்ள ஓர் இடத்திற்கு நீங்கள் வருகின்றீர்கள்’’

### எமது தொலைநோக்கு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் மீயுயர் நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படுகின்ற நீதி நிர்வாகம் தொடர்பான உத்தியோகபூர்வ கடமைகளை துல்லியமாகவும் மற்றும் செயற்றிறனாகவும் நிறைவேற்றுதல்.

### எமது பணிநோக்கு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் உயர் நீதிமன்றம் இறுதி நீதிமன்றமாக இருப்பதால், தேவையான சகல உத்தியோகபூர்வ நடவடிக்கைகளையும் உடனடியாகவும் செயற்றிறனாகவும் நிறைவேற்றுவதன் மூலம், தேவைப்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு உயர் நீதிமன்றப் பதிவகத்துக்கு வருகை தருகின்ற சகல திறத்தவர்களுக்கும் திருப்திகரமான சேவையை வழங்குவதன் மூலமும், சட்டம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதன் மூலமும், நீதி நிர்வாகத்தின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதன் மூலமும், மேற்படி நிறுவனத்தின் உள்ளார்ந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்.

### எமது அர்ப்பணிப்பு

- உண்மையாக
- அறிவுரீதியாக
- நெறிமுறையாக
- புரிந்துணர்வுடன்
- வெளிப்படையாக
- பொறுப்புடன்
- உடனடியாக
- செயற்றிறனாகவும் மற்றும் பயன் விளைவாகவும்

எமது சேவையை வழங்குவதற்கு நாம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளோம்.

## எமது பொறுப்பு

| | வழங்கப்படுகின்ற சேவை | சேவையின் தரநியமங்கள் (மணித்தியாலங்கள்/வாரங்கள்/நாட்கள்) | ஏற்புடைய சட்டங்கள், சட்டக்கோவைகள், ஒழுங்குவிதிகள் | சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் | உதவிக்காக நாட வேண்டிய நபர் |
|---|---|---|---|---|---|
| 01 | உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்படக் கூடிய சகல வழக்குகளையும் பொறுப்பேற்றல், வழக்கேடுகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றைப் பாதுகாத்தல் | | *இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு மற்றும் (1996ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க) மாகாண மேல் நீதிமன்றங்களின் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், (2006ஆம் ஆண்டின் 54ஆம் இலக்க) மாகாண மேல் நீதிமன்றங்களின் (விசேட ஏற்பாடுகள்) (திருத்த) சட்டம், (1979ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க) அரச காணிகள் (உடமை மீளப்பெறுதல்) சட்டம் போன்ற சட்டங்கள்<br>* குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை<br>* உயர் நீதிமன்ற சட்டவிதிகள்<br>* நீதி சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள்<br>* தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம்<br>* தேசிய சுவடிக்கூட திணைக்களத்தின் சுற்றறிக்கைகள் | | உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் (நீதிமன்றப் பிரிவு) |
| 02 | திறந்த நீதிமன்றங்களில் விளக்கத்திற்கு நியமிக்கப்படுகின்ற வழக்குகளின் பட்டியலைத் தயாரித்தல் மற்றும் அவற்றிற்கான தவணைகளை நியமித்தல் | | * உயர் நீதிமன்ற சட்டவிதிகள்<br>* அரசியலமைப்பு | | உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் |
| 03 | நீதிமன்றக் கட்டளைகள் மற்றும் தீர்ப்புக்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை வழங்குதல் | கட்டளை/தீர்ப்பு வழங்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு வாரங்களுக்குள் | * உயர் நீதிமன்ற சட்டவிதிகள்<br>* நீதி சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள்<br>* தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் | நகர்த்தல் பத்திரம் | உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் (நீதிமன்றப் பிரிவு) |
| 04 | உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக சேர்த்துக் கொள்தல் | விண்ணப்பதாரியால் சகல ஆவணங்களையும் சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களுக்குள் | * உயர் நீதிமன்ற சட்டவிதிகள்<br>* நீதி சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கைகள்<br>* தகவல் அறிவதற்கான உரிமைச் சட்டம் | *சட்டக் கல்லூரியால் தரப்படுகின்ற படிவம்<br>* சத்தியக் கூற்று<br>*இலங்கை சட்டக் கல்லூரியால் வழங்கப்படுகின்ற சான்றிதழ்கள்<br>* பெயர் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி மூலம் | உயர் நீதிமன்றத்தின் பதிவாளர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | * பத்திரிகை அறிவித்தல்<br>*தொழில் பயிற்சி பூர்த்தி செய்த கடிதம்<br>*சட்டத்தரணியாக சேர்த்தல் அறிவித்தல்<br>* நன்னடத்தை சான்றிதழ்கள் (2) | |
| **05** | சத்தியக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய ஆவணங்களை உறுதிப்படுத்திய சட்டத்தரணிகள் உயர் நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணிகளா என்பதை உறுதிப்படுத்துதல் | ஒரு நாளைக்குள் | | உயர் நீதிமன்றப் பதிவகத்தில் சத்தியக் கூற்றுக்களை உறுதிப்படுத்தும் அலுவலருக்கு உரிய ஆவணங்கள் கையளிக்கப்பட வேண்டும் | உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் (நீதிமன்றப் பிரிவு) |
| 06 | சட்டத்தரணிகளுக்கு எதிராக ஆரம்ப ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் | | * நீதித்துறைச் சட்டம் - பிரிவுகள் 43 மற்றும் 44<br>* உயர் நீதிமன்ற சட்டவிதிகள் | சத்தியக் கூற்றுடன் உரிய ஆவணங்கள் | உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் (நீதிமன்றப் பிரிவு) |
| 07 | உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள சகல வழக்குகள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக வழக்கேடுகளை பார்வையிடுவதற்காக வாய்ப்பை வழங்குதல் | 1-4 நாட்கள் | | | உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் (நீதிமன்றப் பிரிவு) |

**<u>எமது எதிர்பார்ப்பு</u>**

எமது நிறுவனம் தொடர்பில் நீங்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கைக்கு நாம் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ற அதே வேளை, எமது சேவைக்காக உங்களால் மேற்கொள்ளப்படுகின்ற வேண்டுகோள் நியாயமாக மற்றும் சாதாரணமாக உரிய காலத்தில் சமர்ப்பிப்பதன் மூலமும் முழுமையான சரியான தகவல்களை சமர்ப்பிப்பதன் மூலமும் எங்களிடமிருந்து எதிர்பார்க்கின்ற மற்றும் எதிர்பார்க்க முடியாத விடயங்கள் தொடர்பில் போதிய தெளிவு உங்களுக்கு இருப்பதன் மூலமும் எங்களுக்கு ஆதரவை வழங்குவதற்கு உங்களால் முடியும் என நாங்கள் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**<u>எமது நியமங்கள்</u>**

உங்கள் விண்ணப்புத்துடன் கோரப்பட்டுள்ள தகவல்கள், எழுத்து மூல ஆவணங்களை சமர்ப்பித்து மற்றும் அவற்றிற்கான கட்டணங்கள் செலுத்தப்பட்டிருந்தால், நீங்கள் கோருகின்ற சேவையை எம்மால் குறிப்பிடப்பட்டுள்ள கால இடைவெளிக்குள் உங்களுக்கு வழங்குவதற்கு நாம் பொறுப்பாவோம்.

இறுதித் தீர்மானம் மேற்கொள்வதில் தாமதம் ஏற்படலாம் அல்லது கட்டாயமாக தாமதமாகின்ற சந்தர்ப்பத்தில் அல்லது ஒரு பிரச்சினை எழுகின்ற சந்தர்ப்பத்தில் அதற்கான காரணம் எங்களால் குறிப்பிடப்படும்.

**<u>முறைப்பாடுகள் மேற்கொள்தல் மற்றும் நிவாரணங்கள் வழங்குகின்ற படிமுறை</u>**

எமது நிறுவனத்தின் ஊழியர்கள் நாகரிகமான முறையில் தேவையான ஆதரவை மற்றும் சேவைகளை உங்களுக்கு வழங்குவார்கள். மேலே குறிப்பிடப்பட்ட நியமங்கள் தொடர்பில் உங்களின் முறைப்பாடுகளை கீழ்க் குறிப்பிடப்படுகின்ற அதிகாரிகளுக்கு சமர்ப்பிக்கலாம்.

பெயர் - திரு. அரவிந்த குணரத்ன

பதவி – பதிவாளர்

அமைவிடம்: -உயர் நீதிமன்றம்

தொலைபேசி/தொலைநகல்/மின்னஞ்சல்- 0112435446

பெயர் - அம்மணி. கிரிஷானி கோதாகொட

பதவி – பிரதிப் பதிவாளர் (நீதிமன்றப் பிரிவு)

அமைவிடம்: -உயர் நீதிமன்றம்

தொலைபேசி/தொலைநகல்/மின்னஞ்சல்- 0112436958

சேவைநாடிகளான பொதுமக்களாகிய உங்களால் வழங்கப்படுகின்ற ஆலோசனைகளை நாம் மகிழ்ச்சியுடன் பொறுப்பேற்றுக் கொள்வோம்.

அ. எமது சேவைகளைப் பெற்றுக் கொள்கின்ற நீங்கள் அல்லது உங்களின் பிரதிநிதிகள் எம்முடன் தொடர்பு கொள்ள விரும்பினால் 0112437507 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தவும்.

ஆ. இந்த பட்டயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் உங்கள் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது உங்கள் கருத்துக்களை வழங்குவதற்கு scdreg@sltnet.lk என்ற மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும்.

பிரசைகள் பட்டயம் என்பது எம்மால் வழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக நீங்களும் மற்றும் நாங்களும் இணைந்து மேற்கொள்கின்ற ஒரு கூட்டு முயற்சியாகும். வுழங்கப்படுகின்ற சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்காக உங்கள் கருத்துக்களை வழங்குவதன் மூலம் எங்களுக்கு உதவுமாறு நாம் உங்களைக் கோருகின்றோம்.

பட்டயத்தின் கீழ் வழங்கப்படுகின்ற சேவைகளை அடிக்கடி திருத்துவதற்கும் மற்றும் மேம்படுத்துவதற்கும் நாம் நடவடிக்கை மேற்கொள்வோம்.